24th July 1964]

சிதம்பரம் தாலுக்காவை சர்வே செய்தல்

* **693 கேள்வி.—திரு. எஸ். சிவசுப்ரமணியன் :** கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னுற்காடு மாவட்டம், சிதம்பரம் தாலுக்காவை சர்வே செய்யும் உத்தேசமுண்டா ?

(இ) ஆமெனில் எப்போது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) ஆம்.

(இ) 1969-ம் வருடம் நவம்பர் மாதத்திற்குப் பிறகு.

பாசன வசதி

* **694 கேள்வி.—திரு. எல். ஆனந்தன் :** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

கள்ளக்குறிச்சி வட்டத்தில் கட்டிக்கொண்டிருக்கும் கோமுகி நதி நீர்த் தேக்கத்தில் இருந்து வலதுபுரமாக கால்வாய் அமைத்து பாசன வசதி செய்துகொடுக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI V. RAMAIAH : No.

* **695 கேள்வி.—திரு. சா. ராமசாமி :** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், உடையார்பாளையம் வட்டத்தில் நந்தியாறு மூலம் நேரடியாகவும், கண்டிராதித்தம் பெரியேரி மூல மாகவும் உள்ள பாசனப் பகுதிகளில் மார்ச் மாதத்தில் தண்ணீர் சரியான முறையில் வராததினுல் 1,500 ஏக்கர் இளம்பயிர்களுக்கு ஏற்பட்டிருக்கும் சேதத்தை அரசாங்கம் அறியுமா ?

(இ) சர்க்கார் இதற்கு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) The 1,500 acres of lands in Udayarpalayam taluk referred to by the Member are in the single crop area of the Nandiar channel and are not normally entitled to supply from February onwards. However, as a special case, in order to save the standing crops the available supplies were distributed equitably and judiciously this year.

* **696 கேள்வி.—திரு. எம் எஸ். செல்வராஜன் :** கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தாம்பிரவருணியில் மழைக்காலத்தில் வீணுகும் தண்ணீ ரைப் பயன்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது மேற் கொள்ள உத்தேசித்துள்ள திட்டங்கள் எவை ?